பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத ஹூ ஆவணி மீ 14 உ வெள்ளிக்கிழமை (31-08-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 10 கதிர்: 181

# முல்லையில் 2 ஹெலிகள் சேதம்

## படுகாயமுற்ற படையினரை மீட்க முடியாத நிலை!

### புலிகள் தொடர்ந்து தாக்குதல்

கொழும்பு, ஆகஸ்ட் 31

முல்லைத்திவு இராணுவ முகாமில் காயமுற்றிருக்கும் 42 படையினரை மீட்பதற்காக முகாமிற்குள் தரை இறங்கிய இரண்டு ஹெலிக் கொப்டர்கள் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களினால் சேதமுற்றன.

அதைத் தொடர்ந்து அப்பகுதியில் கடும் சண்டை நடைபெற்று வருகிறது.

விடுதலைப் புலிகளின் கடும் மோட்டார் தாக்குதலினால் தான் இரண்டு ஹெலிக் கொப்டர்களும் சேதமுற்றன என்றும்—

இதனால் காயமுற்ற படையினரை மீட்கும் இராணுவத்தினரின் முயற்சி முறியடிக்கப் பட்டது என்றும் இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி ஏஜென்ஸி செய்திகள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

### அம்பாறையில் மோதல்; 3 புலிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 31

அம்பாறை வட்ட மடுவில் கடந்த செவ்வாயன்று காலை 6.30 மணியளவில் விடுதலைப் புலிகளின் முகாமைச் சுற்றி வளைத்த படையினருடன் நடந்த மோதலில் மூன்று விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்தனர்.

கவி [கல்லடி], செல்வம் [காரைதீவு], மேகன் [அக்கரைப்பற்று] ஆகியோரே வீரமரணம் அடைந்தவர்களாவர். [உ]

### யாழ். கோட்டையைப் பிடிக்க சண்டை நடத்துவது ஏன்?

#### ரஞ்சன் தரும் புதுக் காரணங்கள்

கொழும்பு, ஆக. 31

அரசாங்கப் படைகள் யாழ்ப்பாணம் கோட்டையைப் பிடிக்க முயல்வதற்கு இரண்டு காரணங்கள் உள்ளதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்திருக்கிறார்.

ஒன்று:- அங்குள்ள இராணுவ முகாமை அகற்றுவது.

இரண்டாவது:- பொதுமக்களின் உபயோகத்துக்காக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியை மீண்டும் திறக்க அனுமதிப்பது —என்று அவர் நேற்றைய வாராந்த பத்திரிகையாளர் மாநாட்டில் புதுக் காரணங்களை வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது:—

ஊர்காவற்றுறையும் மண்டைதீவும் தற்போது அரசுப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ளன.

இதற்காக நடந்த சண்டையில் சிவிலியன்களின் உயிரிழப்பு சொற்பமாகவே இருந்தன.

யாழ் குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் நிலைகள் மீதும் பதுங்கு குழிகள் மீதும் தான் இலங்கை விமானப் படை விமானங்கள் குண்டு வீசித் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

குடாநாட்டில் போர் விமானங்கள் கண்மூடித்தனமாக குண்டுத் தாக்குதல்களை நடத்தி சிவிலியன்களை பெரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வந்தாறுமூலையில் 3 தமிழர் படையினரின் சூட்டுக்குப் பலி

யாழ்ப்பாணம், ஆக. 31

கடந்த செவ்வாயன்று வந்தாறுமூலையில் படையினரின் சூட்டுக்கு இலக்காகி மூன்று அப்பாவித் தமிழர்கள் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கொம்மாந்துறையைச் சேர்ந்த வன்னியசிங்கம் (வயது 15), வந்தாறுமூலையைச் சேர்ந்தவர்களான ஐந்து பிள்ளைகளின் தாய் கணபதிப்பிள்ளை தவமணி [வயது 60], ஐந்து பிள்ளைகளின் தந்தையான கிருஷ்ண பிள்ளை (வயது 45) ஆகியோரே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர். [உ]

### மீனவர்கள் மீது ஹெலி சூடு

பூநகரி, பள்ளிக்குடாப் பகுதியில் கடற்தொழிலுக்குச் சென்றவர்கள் மீது நேற்று முன்தினம் [புதன்] ஹெலி ஒன்று தாக்குதல் நடத்தியது இச்சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

பூநகரி தம்பிராயைச்சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை மரியதாஸ் (வயது 30) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார்.

### வடக்கு - கிழக்கு நிலைவரம் பற்றி 19 எதிர்க்கட்சிகள் தூதுக்குழு திங்கள் பிரேமாவுடன் பேச்சு

கொழும்பு, ஆக. 31

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோபண்டாரநாயக்கா தலைமையிலான 19 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கும் தூதுக்குழு ஒன்று எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10மணியளவில் ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்திக்க உள்ளது.

வடக்கு -கிழக்கு மாகாணத்தில் உள்ள தற்போதைய நிலைவரம் குறித்து பேச்சுக்களின் போது ஆராயப்படும். [ஒ-எ]

### குண்டு வீச்சுத் தாக்குதல்களை நிறுத்த இந்தியா நிர்ப்பந்தம்

#### ராஜ்ய சபையில் இணை அமைச்சர் தகவல்

புதுடில்லி, ஆக. 31

இலங்கை அரசுப்படைகள் தமிழ்ப் பகுதிகளில் பொது மக்கள் மீது விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்துவதை நிறுத்தும் பொருட்டு—

இந்திய அரசு இலங்கையின் மீது ராஜீக வழியில் நிர்ப்பந்தங்களை மேற்கொண்டு வருவதாக—

வெளியுறவுஇணைஅமைச்சர் ஹரிகிஷோான் நேற்று ராஜ்ய சபையில் அறிவித்தார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை சம்பந் மாக ராஜ்ய சபாவில் இரண்டு நாட்கள் நடந்த விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

இலங்கைக்கு இந்திய நாடாளுமன்ற தூதுக் குழு ஒன்றை அனுப்பி அங்குள்ள நிலைவரம் பற்றி அறிவதற்கும் இணை அமைச்சர் இணக்கம் தெரிவித்தார்.

இதேவேளை விவாதத்தின் முடிவில்—

இலங்கைத் தமிழர் படும் அவதிகள் குறித்து இந்திய மக்கள் அடைந்துள்ள கவ

[4 ஆம் பக்கம் பார்க்க]

### நெல்லியடியில் உயிரிழந்தோர் 10ஆக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 31

நெல்லியடிச் சந்தை மீது கடந்த செவ்வாய்க் கிழமை நடத்தப்பட்ட பொம்மர் குண்டுவீச்சுத் தாக்குதலின் போது படுகாயமடைந்து, மானிப்பாய் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் நேற்று மரணமானார்.

அல்வாய் மேற்கைச்சேர்ந்த மகேசன் சண்முகேஸ்வர மூர்த்தி (வயது 33) என்பவரே மரணமானவராவார்.

இதனையடுத்து இந்தக் குண்டு வீச்சில் இறந்தவர்களின் எண்ணிக்கை பத்தாக அதிகரித்துள்ளது. [ஒ]

### ஊர்காவற்றுறைப் பகுதியிலிருந்து புங்குடுதீவுக்கு 18,000 அகதிகள்

#### ஊரடங்கை தளர்த்தி நிவாரணம் தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 31

இராணுவ நடவடிக்கைகளினால் நாரந்தனை, கரம்பொன், புளியங்கூடல், சரவணை, சோளாவத்தை, வேலணை ஆகிய பகுதிகளில் 3 ஆயிரத்து 500 முதல் 4 ஆயிரம் வரையான குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 18 ஆயிரம் பேர் அகதிகளாகியுள்ளனர். இவர்கள் புங்குதீவுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

உடனடியாக ஊரடங்கைத் தளர்த்தி இந்த மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணங்களை வழங்க ஏற்பாடு செய்யுங்கள்.

வேலணையின் முன்னாள் உதவி அரசாங்க அதிபரும் மாகாணசபை உயரதிகாரியுமான திரு. எஸ். சடாட்சர சண்முகதாஸ், யாழ். அரச அதிபரை இவ்வாறு கோரியிருக்கிறார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### படையினரின் அரண்மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 31

அம்பாறை கெட்டிப் பாளையத்தில் படையினரின் காவல் அரண் ஒன்றின்மீது விடுதலைப்புலிகள் கடந்த செவ்வாயன்றுதாக்குதல்நடத்தினர். [உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுன்னாகத்தில் றொக்கட் தாக்கு

யாழ்ப்பாணம், ஆக. 31 சுன்னாகம் பொது நூலகப் பகுதியில் புதன் மாலை பொம்மர் விமானம் ஒன்று திடீரென றொக்கட் தாக்கு தலை நடத்தியது. ஆனால் சேதம் எதுவும் ஏற்பட வில்லை. [ஓ-5]

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்:
16 - 10 - 1946

மறைவு:
31 - 08 - 1989

### சூ. அல்பேட் எட்வீனம்மா

அம்மா நீ உடல் களைப்பின்றி குடும்பம் பல் கலைக் கழகமாக உழைத்திட்டாய் பல வருடம் நாம் (சென்ற பின்) அலையவில்லை ஓர் வருடம் முடியு முன் ஆற்றுவாரும் தேற்றுவாருமின்றி அனாதை களாய் தவிக்கின்றோம். போன இடம் தெரியவில்லை போகும் வழியும் புரியவில்லை. எம் வாழ்க்கைப் பயணத்தை முடித்து வைப்பார் யாருமில்லை. உல கறியாப் பிள்ளைகள் நாம் புளுவாய் துடிப்பது போல் தருமம் உலகில் இறந்ததென தவிக்கின்ற. உம் உற்றார், உறவினர் துயர் துடைக்க விரைந்திடுவாய்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காய் புனித அந்தோனியார் ஆலயம் மானிப்பாய், புனித அடைக்கல மாதா ஆலயம் ஆனைக்கோட்டையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

குடும்பத்தினர்.

சூரியவெளி,
நாவாந்துறை.

[14056]

# படையினர் வெளியேற முன்னர் கட்டடங்களுக்கு தீ வைத்தனர்

## பரந்தனில் இன்னும் மயான அமைதி நிலவுகிறது

கிளிநொச்சி, ஆக. 31

பரந்தன் சந்தி இராணுவ முகாமை இராணுவத்தினர் கைவிட்டுச் செல்வதற்கு முன்னர் அந்தப் பகுதியை முற்றாகத் தீயிட்டுக் கொளுத்தி அழித்து விட்டுச் சென்றுள்ளனர். வர்த்தக நிலையங்கள், அரச அலுவலகங்கள், வீடுகள் ஆகியன தீயிட்டுக் கொளுத்தப்பட்டு அந்தப் பகுதி மயானம் போல் காட்சி அளிக்கின்றது.

விடுதலைப்புலிகள், முகாம் பகுதியில் காணப்படும் மிதி வெடி, பொறி வெடிகளை அகற்றும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளார்கள்.

பரந்தன், கிளிநொச்சிப் பகுதிகளில் அமைதியான சூழ்நிலை நிலவுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது ஆனையிறவில் மட்டுமே படையினரின் முகாம் இருக்கிறது. (இ - 76)

## இடைக்கால நிர்வாகக் குழு

கொழும்பு, ஆக. 31

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு இடைக்கால அரசியல் நிர்வாகக் குழு ஒன்றை அமைக்கும்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். அஷ்ரப் ஜனாதிபதியைக் கேட்டுள்ளார். (இ-எ)

## வவுனியாவில் கடைகளை திறக்குமாறு கோரிக்கை

கொழும்பு ஆக. 31

வவுனியா நகரில் உள்ள கடைகளைத் திறந்து வியாபாரம் செய்ய வருமாறு வர்த்தகர்களுக்கு அம்மாவட்ட அரசாங்க அதிபர் கேர்னல் ரத்னாயகா அழைப்பு விடுத்திருக்கிறார்.

காலை 9 மணியில் இருந்து மாலை 4 மணி வரை வியாபாரம் செய்யலாம் என்றும்.

நகருக்குள் பிரவேசிக்க காலை 9 மணியில் இருந்து 11 மணிவரை அனுமதி வழங்கப்படும் என்றும் பிற்பகல் 1 மணியில் இருந்து 3 மணிவரை நகரை விட்டு வெளியேற அனுமதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

# முன்னேறிய பகுதிகளில் படையினர் வீடுகளை உடைத்து சூறையாடினர்

## ஊர்காவற்றுறையிலிருந்து வந்தவர் தகவல்

ஊர்காவற்றுறையில் 22 ஆம் திகதி புதன்கிழமை இராணுவத் தாக்குதல் ஆரம்பமான போது கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் தஞ்சம் புகுந்திருந்த விக்டர் என்பவர் ஊர்காவற்றுறையில் நடந்த சம்பவங்கள் குறித்து உதயன் செய்தியாளரிடம் தெரிவித்த விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

புதன் அதிகாலையின் பின்னர் ஊர்காவற்றுறையில் மோதல் ஆரம்பமானது.

படையினர் அன்றைய தினமே ஆஸ்பத்திரி, பாடசாலைப் பகுதிகள் வரை முன்னேறி வந்தனர். முன்னேறிய வழிகளில் பல வீடுகளை உடைத்து அவர்கள் சூறையாடினர்.

அதன் பின்னரே அவ்விட மக்கள் விபரமறிந்து இடம் பெயரத் தொடங்கினர்.

அப்பகுதி மக்கள் பலரும் சாட்டி, புங்குடுதீவு, யாழ்ப்பாணம் பகுதிகளை நோக்கி இடம் பெயரத் தொடங்கினர். சிலர் தேவாலயங்களில் தஞ்சமடைந்தனர். ஒரு சிலர் வீடுகளில் இருந்தனர்.

கடலிலிருந்து பீரங்கி, ஷெல் தாக்குதல்கள் கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்பட்டன.

### லாண்ட்மாஸ்டரில்

நாகமுத்து [வயது 64] என்பவரின் வீட்டினுள் புகுந்த படையினர், அவரையும், அவரது மகனான வைரமுத்து [35 வயது] என்பவரையும் வெட்டிக் கொன்றனர். அவர்களது வீட்டையும்சூறையாடி பெறுமதிமிக்க பொருள்களை 'லாண்ட் மாஸ்டரில்' ஏற்றிச் சென்றனர்.

வழியில் அப்பகுதியைச் சேர்ந்த 'டெய்லர்' ஒருவரும் துப்பாக்கிச் சூட்டுக்குஆளாகி இறந்தார்.

வைரவர் கோவிலடி என்ற இடத்தில் நடந்த சம்பவத்தில் வெள்ளாச்சி என்பவரின் மகன் உட்பட 4 பேர் கொல்லப்பட்டனர்.

மற்றும் ஓர் சம்பவத்தில் தெங்கு -பனம் பொருள் கூட்டுத்தாபனத்தில் சாரதியாகப் பணியாற்றிய பிலிப் ஐயா [48 வயது] என்பவர் உட்பட 5 பேர் இறந்தனர்.

சரவணைச் சந்தியில் உள்ள வீட்டின் மீது பொம்மர் குண்டுவீச்சு நடத்தியதில் இரண்டு வயோதிபப் பெண்கள் பலியானார்கள்.

புதன், வியாழன் ஆகிய 2 நாட்களும் இடம் பெற்ற விமானத் தாக்குதல்களினால் ஊர்காவற்றுறை நகரம், நாரந்தனை, செருக்கன் றோட் பகுதிகளில் பல வீடுகளும், கட்டடங்களும் சேதமுற்றன.

இந்த விமானத் தாக்குதல்களால் பலர் கொல்லப்பட்டும், காயப்பட்டும் இருக்கலாம்.

ஓர் கிறிஸ்தவ தேவாலயத்தினுள் பெருமளவு மக்கள் தஞ்சமடைந்திருந்தனர். நானும் அங்கேயே தஞ்சம் அடைந்திருந்தேன். தேவாலயத்தை இலக்கு வைத்து பொம்மர் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தியது.

இலக்குத் தவறி குண்டுகள் அயற்புறங்களில் வீழ்ந்ததால் அங்கிருந்த பொது மக்கள் உயிர் தப்பினர். நான் அதன் பின்பு வெளியேறி யாழ்ப்பாணத்தை அடைந்தேன்.

இப்படி அவர் கூறினார். (இ-3-ரி)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி க. அன்னரத்தினம்

துன்னாலை வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னம்பலம் கனகசபையின் அன்பு மனைவி அன்னரத்தினம் 28 - 08 - 90 செவ்வாய்க்கிழமையன்று காலமானார். அன்னார் செல்வராசா [தொழில் அதிகாரி மன்னார்], மகேந்திரராசா [டோகா], இரத்தினராசா [கண்ணாடித் தொழிற்சாலை நீர் வேலி], வரதராசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தவபூசணி, நளினி, பவா, சறோஜினி ஆகியோரின் அன்பு மாமியும், காலம் சென்ற கந்தசாமி (ஆசிரியர்), பூமணி, இராசேஸ்வரி, காலம்சென்ற தர்மலிங்கம் ஆகியோரின் சகோதரியும் விசாலாட்சியின் மைத்துனியும், நிலா, பிரபா, பிரகாஷ், நிதா, சுரேஸ், சுஷா, மதனி, ரூமேஸ், ரமேஸ், ராதிகா, கீர்த்திகா, தர்சிகா, ராகவன் ஆகியோரின் பேத்தியும், ராஜீவ், றணியா ஆகியோரின் பூட்டியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29 - 8 - 90 புதன்கிழமை காலை நடைபெற்று கருகம்பன் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
பொ. க. செல்வராசா.

துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

(சி-5179)

### தம்பிப்பிள்ளை மயில்வாகனம்
(ஐயாத்துரை)

வேளா தோப்பை (கட்டப்பிராய்) வசிப்பிடமாகக் கொண்ட தம்பிப்பிள்ளை மயில்வாகனம் அவர்கள் 27 - 08 - 1990 அன்று காலமானார். அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும், கௌரியம்மா, லோகநாயகி (ஆசிரியை, இராமநாதபுரம் மேற்கு, அ.த.க பாடசாலை), தவராசா, கிருஷ்ணபாலராசா (சுவிஸ்லாந்து), கருனேஸ்வரன் (பிரான்ஸ்), நந்தீஸ்வரன் (அரசினர் சித்த மருத்துவத்துறை பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சிவானந்தமூர்த்தி [ஈராக்], கௌரி ஆகியோரின் சிறிய தகப்பனாரும் விபுல நந்தன், வசந்தா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 28 - 08 - 1990 அன்று நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்;
தவராசா [மகன்]

வேளாதோப்பு,
கட்டப்பிராய்.

[14117]

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னம்மா (றெஜீனா) சின்னத்துரை

குருநகரைச்சேர்ந்த திருமதி அன்னம்மா(றெஜீனா) சின்னத்துரை 29. 08. 1990ல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற பிரபல தொழிலதிபர் (கலைஞர்) P. S. சின்னத்துரை (அண்ணாவியார்), அவர்களின் அன்பு மனைவியும், திருமதி கிளமன்றா, திரு. S. L. மன்னவராயன் (பொறியியலாளர் கனடா), காலஞ்சென்ற திருமதி றீற்றா பிலோமினா, திருமதி பிறக்சிற் றஞ்சிதம், திருமதி லில்லி, திருமதி கிறிஸ்ரில்டா, திருமதி சீதா ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற திரு J. மரியாம்பிள்ளை (இளைப்பாறியகளஞ்சியப்பொறுப்பாளர்(கொழும்புகொமர்ஷல் கம்பனி), திருமதி ஜான் மேரி (கனடா), திரு. லீனப்பு மனுவேற்பிள்ளை (இரத்னா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்), திரு. A. C. இராசதுரை (உள்ளூர் ஆட்சி மன்ற விசேட ஆணையாளர்), திரு. A. ஜோசப் (இளைப்பாறியவருமான பரிசோதகர் யாழ் மாநகரசபை), திரு. M. S. பேரின்பநாயகம் J. P. (முன்னாள் யாழ். மாநகர உதவி முதல்வர்), திரு. M. S. அல்பேட் (பிரபல வர்த்தகர்), ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29. 08. 1990 ல் அரியாலையில் நடைபெற்றுகொஞ்செஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ம.ச. அல்பேட்.

82, மவுண்ட், கார்மேல் வீதி.

(14119)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தளம் தமிழ்க் கிராமங்களில் படையினர் துன்புறுத்தல்

யாழ்ப்பாணம். ஆக. 31
புத்தளம் மாவட்டத்தில் பல தமிழ்க் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் படையினரின் துன்புறுத்தல்களுக்கு ஆளாகி வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

இந்தக்கிராமங்களில் உள்ள தமிழர்கள் பற்றி அனாமதேயக் கடிதங்கள் பொலீஸாருக்கு அனுப்பப்படுகின்றன என்றும் இதனால் மக்கள் விசாரணைக்காக பொலீஸ் நிலையங்களுக்கு அழைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சிலாபம், குசலை, கருங்காலிசோலை, உடப்பு, முந்தல் போன்ற தமிழ்க் கிராமங்களிலேயே தமிழ்மக்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். (இ-5)

## அகதிகளுக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம், ஆக. 31
யாழ்ப்பாணம் மெதடிஸ்த திருச்சபை யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் உள்ள அகதிகள், ஓட்டுமடம் பகுதியில் வாழும் வசதி அற்ற குடும்பங்கள், மற்றும் தொல்புரம், முஸ்லிம் பகுதி அகதிகள் ஆகியோருக்கு நிவாரண உதவிகளை வழங்கி வருகிறது. (இ)

## இலவச சிகிச்சை

யாழ்ப்பாணம், ஆக. 31
''நிழல்கள்'' சமூகசேவைப் பிரிவினர், அரியாலை சன சமூக நிலைய மண்டபத்தில் சென். ஜோன்ஸ் முதலுதவிப் படைப் பிரிவு ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

இங்கு சகல வியாதிகளுக்கும் இலவச சிகிச்சை அளிப்பதாக அறிவிக்கப்பட்டது. (அ)

## நுணாவிலில் வீடுகள் சேதம்

நுணாவில் மேற்கு கண்டி வீதியில் ஹெலியின் றொக்கெட் தாக்குதலால் ஐந்து வீடுகள் சேதமடைந்தன.

இவற்றுள் இரு வீடுகள் பெரும் அளவில் பாதிக்கப்பட்டன. ஹெலி வேட்டுக்களால் வீதியில் சென்ற சிலர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் சனிக்கிழமை காலை இடம்பெற்றது. (இ-31]

# செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழு உரிய விதத்தில் செயலாற்றவில்லை

## ஜெனீவா தலைமையகத்துக்கு யாழ். பிரஜைகள்குழு முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஆக. 31
இடம்பெயர்ந்தோருக்கான உணவு, உறைவிடம் மற்றும் அத்தியாவசிய மருந்துவகைகளையும் ஏனைய வைத்திய உதவிகளையும் வழங்குவதில் செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக்குழு போதிய அளவு உரிய விதத்தில் செயற்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுவதில் நாங்கள் வருத்தம் அடைகிறோம். காணாமற்போனவர்கள், பிரிந்துபோன குடும்பங்களைக் கண்டுபிடிப்பதற்கும் எவ்வித முயற்சிகளும் செய்யப்படவில்லை என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

இவ்வாறு யாழ். பிரசைகள் குழு, ஜெனிவாவில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் தலைவருக்கு எழுதி உள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

செ. ச. ச. குழுவின் இலங்கைப் பிரதிநிதி டாக்டர் பிலிப் கொன்ரசாலை சந்தித்து, வேண்டிய உதவிகளைச் செய்யுமாறு கேட்பதற்கு நாம் எடுத்த முயற்சிகள் பயன் அளிக்கவில்லை என்றும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள மற்றும் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிவில் நிர்வாகம் சீர்குலைந்துள்ளதால் அகதிகளுக்கு உதவும் பொறுப்பு அரச சார்பற்ற நிறுவனங்களிடமே வந்துவிட்டது.

இச்சூழ்நிலையில் செ. ச, ச. குழு மனிதாபிமான ரீதியான பங்கை பயனுள்ள விதத்தில் செலுத்தத் தவறிவிட்டது.

வழமையான உணவு, எரிபொருள், மருந்து எஃபன நாட்டின் பிரதான துறைமுகமாக விளங்கும் கொழும்பில் இருந்தே கொண்டு வரப்படுவது உண்டு ஆனால் கொழும்புக்கும் வடக்கு - கிழக்குக்கும் இடையிலான தனியார் - அரசாங்க போக்குவரத்துக்கள் பாதுகாப்பு படையினரால் தடுக்கப்பட்டுள்ளன. இதனால் வடக்கு - கிழக்கு மாகாணம் நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுவிட்டது.

இதனால் அரச சார்பற்ற நிறுவனங்களும் மனிதாபிமான நிறுவனங்களும் இடம்பெயர்ந்து நிர்க்கதிக்கு உள்ளான மக்களுக்கு உணவு மற்றும் வைத்திய வசதிகளை வழங்க முடியாத நிலையில் உள்ளன.

மிகக் குறிப்பாக குழந்தைகளுக்கான பால் மா, உணவுகள் பிரதானமாக மருந்து வகைகள், உயிர்காக்கும் ஒட்சிசன் என்பன கிடைப்பதாக இல்லை.

இப்படியான நிலையில், இவற்றைப் பெற்றுக் கொடுப்பதில் போக்குவரத்துக்குத் தேவையான ஒரு பொருளும் இல்லாத நிலையில் அரசு சார்பற்ற நிறுவனங்கள் உள்ளன.

இத்தகைய சூழ்நிலையில் செ. ச. ச. குழுவின் சேவை அத்தியாவசியமாகக் கருதப்பட்ட போதிலும் அது உரிய முறையில் செயற்படவில்லை.

எனவே நிர்க்கதிக்குள்ளாகி இருக்கும் மக்களுக்கு உதவும் விதத்தில் மனித அவலங்களைத் தீர்ப்பதென்ற தங்கள் மேலான கோட்பாட்டுக்கு ஏற்பவடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தகுந்த நேரத்தில் உதவி செய்யுமாறு உங்கள் அலுவலகங்களை பணிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இப்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## வெள்ளைக் கொடிகளுடன் மண்டைதீவுக்கு பெற்றோர்!

யாழ்ப்பாணம், ஆக. 31
இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 35 பேர்களது பெற்றோர் நேற்று முன்தினம் (புதன்) மண்டைதீவுக்கு வெள்ளைக் கொடிகளுடன் சென்றனர்.

ஊர்காவற்றுறை, அல்லைப்பிட்டி, நாரந்தனைப் பகுதிகளைச் சேர்ந்த மக்களே தமது பிள்ளைகளைவிடுவிக்கக்கோருவதற்காக வெள்ளைக் கொடிகளுடன் அங்கு சென்றனர்.

இராணுவ அதிகாரிகளிடம் அவர்கள் தமது பிள்ளைகளை விடுவிக்குமாறு கெஞ்சிக் கேட்டபோது-

''இந்த 35 பேருக்காக வேறு 35 பேரை அழைத்து வந்து எம்மிடம் ஒப்படைத்தால் இவர்கள் விடுவிக்கப்படுவர். பாதைகளைச் செப்பனிடவும் வேறு வேலைகளைக் கவனிக்கவும் இவர்கள் எமக்குத் தேவைப்படுகிறார்கள்'' என்று இராணுவ அதிகாரிகள் கூறினராம். (ஒ)

# மட்டக்களப்பு தபாலகத்தில் பணம் - பொருள் களவு

யாழ்ப்பாணம், ஆக. 31
மட்டக்களப்பு தபாலகத்தில் இருந்து ரொக்கப்பணம் மற்றும் பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

கடந்த ஜூன் மாதம் 25ஆம் திகதி வரை தபாலகம் இயங்கியதாகவும் அதன் பின்பு தபாலகக் கட்டடத்தில் இராணுவம்நிலைகொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

களவாடப்பட்ட ரொக்கப் பணம் பொருட்களின் பெறுமதி 6 இலட்சத்து 94 ஆயிரம் ரூபா என கணக்கிடப்பட்டுள்ளது. [இ-5]

# கொழும்பு ஆலயங்களில் பொலீஸ் காவலுடன் பூசை!

கொழும்பு, ஆக. 31
கொழும்பில் உள்ள இந்து ஆலயங்களில் இப்போதும் பொலீஸ் பாதுகாப்புடனேயே பூசைகள் நடைபெற்று வருகின்றன.

ஆலயங்களுக்குச் செல்லும் தமிழ் பக்தர்கள் ஒருவித மனப் பீதியுடனேயே செல்கின்றனர். ஆலயங்களில் பணி புரியும் இந்துக்குருமார் நிலையும் அவ்வாறே.

இத் தகவலை கொம்பனித் தெருவில் உள்ள ஆலயம் ஒன்றில் பணிபுரியும் அர்ச்சகர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

சிங்கள, முஸ்லிம் குண்டர்கள் எப்போதும் எதையும் செய்யலாம் என்ற அச்சம் இங்கு வாழும் தமிழர்கள் மத்தியில் நிலவுகிறதாம். எனினும் பலர் அதனை வெளியில் காட்டிக் கொள்ளாது தமது நாளாந்த வாழ்க்கையை ஒருவித மனப் பீதியுடன் கடத்துகிறார்கள் எனவும் அவர் சொன்னார்.

இதேவேளை—

இம்மாதம் முதல் வாரத்தில் ஒருநாள் இரவு 8 30 மணியளவில், சுமார் 300 பேர் கொண்ட கோஷ்டி ஒன்று பண்டாரநாயக்க மாவத்தையில் உள்ள முருகன் ஆலயத்தில் புகுந்து அட்டகாசம் புரிந்தது.

ஓட்டோ ரிக்ஷோக்களில் கூட்டம் கூட்டமாக வந்து சேர்ந்த அந்தச் குண்டர்கள் கோவில் பின்பகுதியில் வசித்த திரு. கைலாசம் என்பவரையும் அவரது மகன் கிஷாந்தராசாவையும்வாளால் வெட்டினர். அவர்கள் படுகாயமடைந்தனர். திரு. பஞ்சநாதன் என்பவருடைய வீடு அடித்து நொறுக்கிச் சேதமாக்கப்பட்டது. திரு. சிறிதரன் என்பவரின் வீட்டிற்குள் புகுந்து அங்கிருந்த பெறுமதியான பொருள்களையும் குண்டர்கள் சேதாமக்கினர். குண்டர்கள் கோவில் வாசற்கதவை கற்களால் எறிந்து சேதப்படுத்தினர்.

ஆலயத்துக்கு மிக அண்மையில் உள்ள பொலீஸ் நிலையத்துக்கு உடனே அறிவித்த போதிலும் பொலீஸார் மிகத் தாமதமாக வந்தனர். வந்தவர்கள் ஆகாயத்தை நோக்கிச் சுட்டனர். பெயருக்காக ஒரு சிலரைக் கைது செய்து சென்றனர்.

இதே போல அதே இடத்தில் அமைந்துள்ள துர்க்கை அம்மன் கோவிலையும் மற்றொரு நாள் இன்னொரு குண்டர் கூட்டம் தாக்கிச் சேதமாக்க முற்பட்டது. கோவில் குருமார் சேதத்தைத் தவிர்க்கும் நோக்குடன் ஆலயத்தைப் பூட்டிவிட்டனர்.

கொழும்பின் ஏனைய பகுதிகளில் குறிப்பாக முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் உள்ள ஆலயங்களிலும் பொலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. (அ)

## நாவற்காட்டில் ஹெலி தாக்கி பெண் காயம்

அச்சுவேலி ஆக. 31
திங்கட்கிழமை இரவுஹெலியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட றொக்கட் தாக்குதலால் அச்சுவேலி நாவற்காட்டைச் சேர்ந்த திருமதி பசுபதி நாகம்மா (வயது 50] என்பவர் படுகாயம் அடைந்தார். [இ-11]

## அதிர்ச்சியால் மரணம்

அராலி, ஆக. 31
இராணுவம் வந்துவிட்டதாக வதந்தி பரவிய போது வீட்டைவிட்டு வெளியேறிய வயோதிபர் ஒருவர் அதிர்ச்சியால் மரணமடைந்தார்.

மரணம் அடைந்தவர் தண்டாயுதபாணி வயது 77

கடந்த ஞாயிறு இரவு அராலித்துறையில் ஹெலியில் இருந்து பரா வெளிச்சம் காட்டப்பட்டபோது இராணுவம் வந்துவிட்டதாக வதந்தி பரவியதும் பலர் இரவோடிரவாக அப்பகுதியில் இருந்து வெளியேறியதும் தெரிந்ததே. [இ]

## ரூ. 2,000 இலங்கை பணத்தை மாற்ற இந்தியாவில் வசதி

சென்னை, ஆக. 31
இலங்கைத் தமிழ் அகதிகள் கொண்டுசெல்லும் இலங்கைப் பணத்தை இராமேஸ்வரம் பகுதியில் உள்ள வங்கிக் கிளைகளில் மாற்றிக்கொள்ள இந்திய ரிஸர்வ் வங்கி அனுமதி வழங்கியுள்ளது.

ஒவ்வொரு அகதியும் 2,000 ரூ. இலங்கைப் பணத்தை இவ் வங்கிகளில் மாற்றிக் கொள்ளலாம் என்றும் —

அப்படி மாற்றிக் கொள்வதற்கு தஸ்தாவேஜுகள் மற்றும் ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டியதில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

## வவுனியா அகதி முகாம்

கொழும்பு, ஆக. 31
வவுனியா மாவட்டத்தில் இடம்பெயர்ந்தவர்களுக்கு இடமளிக்கக் கூடியதாக வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டு வரும் அகதி முகாம் அடுத்த மாதம் 5ஆம் திகதி முதல் இயங்க ஆரம்பிக்கும் என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் சரித்தா ரத்வத்தை தெரிவித்தார்.

மன்னார் தீவில் அகதி முகாமை அமைக்க பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் மடு அகதி முகாமில் தற்போது 15 ஆயிரம் அகதிகள் வரையில் தங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-எ)

# மட்டக்களப்பு - கரடியனாற்றில் புலிகள் சாதாரண நடமாட்டம்

## ஏ. எப். பி. செய்தியாளர் தகவல்

கொழும்பு. ஆக. 31
மட்டக்களப்பு, கரடியானாறு பகுதியில் இயந்திரத் துப்பாக்கிகளுடன் விடுதலைப் புலிகள் போராளிகள் சாதாரணமாக நடமாடுகிறார்கள் என்று ஏ. எப். பி செய்தி ஒன்று தெரிவித்தது.

கிழக்கு மாகாணம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இல்லை என்று கூறமுடியாது என்றும் —

கொல்லப்பட்டு விட்டார்கள் என்று அரசுப்படையினரால் கூறப்பட்ட விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதிகளான கரிகாலன், நியூட்டன், நீதி ஆகியமூவரையும் தான் நேரிற் சந்தித்துப் பேசியதாகவும் மட்டக்களப்புக்குச் சென்ற ஏ. எப். பி. செய்தியாளர் தெரிவித்திருக்கிறார். [இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். கோட்டையை மீட்கும் முயற்சியில் பின்னடைவு

யாழ்ப்பாணம், ஆக. 31

யாழ்.கோட்டை இராணுவ முகாமை மீட்கும் முயற்சியில் இலங்கை இராணுவத்துக்கு மேலும் பின்னடைவு ஏற்பட்டிருப்பதாக இராணுவ அதிகாரிகள் ஒப்புக் கொண்டனர் என்று இந்திய வானொலி நேற்றுப் பிற்பகல் அறிவித்தது.

விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மண்டைதீவில் இருந்து யாழ். கோட்டைக்குச் செல்லும் பாதையில் உள்ள பாலங்களையும் மதகுகளையும் கடந்த புதன்கிழமை தகர்த்து விட்டதே இப் பின்னடைவுக்கு காரணம் என்றும் இராணுவ அதிகாரிகள் கூறியதாக இந்திய வானொலி மேலும் தெரிவித்தது.

இதே வேளை - மண்டைதீவின் ஒரு பக்கத்தில் 'பொன்டூன்' [pontoon] ரக பாலம் ஒன்றை அரசுப் படையினர் அமைத்திருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிததன என்று பி. பி. சி. வானொலி அறிவித்தது:

மண்டைதீவு - யாழ். பாதையில் உள்ள மதகுகளும் பாலங்களும் கடந்த புதன்கிழமை போராளிகளால் தகர்க்கப்பட்டதையும் பி. பி. சி. கொழும்பு செய்தியாளர் கிறிஸ்தொபர் மொரிஸ் ஊர்ஜிதம்செய்தார். (உ-எ)

## முஸ்லிம் தீவிரவாத குழு மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 31

கடந்த 27 ஆம் திகதி வந்தாறுமூலையில் முஸ்லிம் தீவிரவாதக் குழுவினர் மீது தாங்கள் நடத்திய தாக்குதலில் அக் குழுவைச் சேர்ந்த இருவர் உயிரிழந்ததாகவும் நால்வர் சாயமுற்றதாசவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

# காரைநகரில் 2 பஸ்களை கடற்படை கொண்டுசென்றது

காரைநகர், ஆக. 31

காரைநகர் பஸ் டிப்போவில் இருந்து இரண்டு பஸ்களைக் கடற் படையினர் எடுத்துச் சென்றனர்.

நேற்று முன்தினம் (புதன்) இரு பிரிவுகளாக படையினர் வெளியேறினர் ஒரு பிரிவினர் டிப்போ பகுதிக்கும், மறு பிரிவினர் கருங்காலிப் பகுதிக்கும் வந்தனர்.

கருங்காலிப் பகுதியில் வயலில் வேலை செய்துகொண்டிருந்த ஒருவரைப் படையினர் முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

குமாரவேலு இராஜரட்ணம் என்பவரே படையினரால் அழைத்துச் செல்லப் பட்டவர் ஆவார். (ஓ)

## கப்பலில் வந்த பொருள்கள் அங்கேயே!

யாழ்ப்பாணம், ஆக. 31

பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் கப்பலிலிருந்து இறக்கப்படும் உணவுப் பொருள்கள் அங்கேயே களஞ்சியப் படுத்தப்படுகின்றன.

ஊரடங்கு உத்தரவை அடுத்து ப. நோ. கூ. சங்க லொறிகள் பருத்தித்துறைக்குச் செல்ல முடியாத நிலையில் உள்ளன. [ஒ-5]

## மூன்று மாதங்களுக்கு முன்னர்

# முல்லேரியா சென்றிருந்த தாதியர் நேற்று வந்தனர்

யாழ்ப்பாணம், ஆக. 31

தாதியர் பயிற்கி நெறிக்காக யாழ்ப்பாணத்தில் இருந்து கடந்த சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னர் முல்லேரியா சென்றிருந்தவர்களில் ஒருபகுதியினர் நேற்று இங்கு வந்து சேர்ந்தனர்.

முல்லேரியாவில் ஏழு நாட்கள் நடந்த பயிற்சி நெறியில் வடக்கு - கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த 52 பேர் கலந்துகொண்டனர். அவர்களில் 8 பேர் மட்டக்களப்புக்கும் ஒருவர் திருகோணமலைக்கும் சென்றுள்ளனர். 12 பேர் யாழ்ப்பாணம் வந்தனர்.

நேற்று யாழ் வந்து சேர்ந்தவர்களில் ஒருவர் உதயனுக்குத் தகவல் தருகையில் கூறியதாவது:-

கடந்த ஜூன் 17 ஆம்திகதி முதல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அகதிகளாகத் தங்கியிருந்தோம்.

நாம் யாழ்ப்பாணம் வந்து சேர பல முயற்சிகளைச் செய்தோம். எனினும் எந்த ஒரு தொண்டர் நிறுவனமும் எமக்குஉதவ முன்வரவில்லை- என்று கவலையுடன் தெரிவித்தார். (ஓ-ரி)

## ஊர்காவற்றுறைக்கான

# செஞ்சிலுவைக் குழுவின் பயணம் தடைப்பட்டது

யாழ்ப்பாணம், ஆக. 31

இராணுவ நடவடிக்கை காரணமாக மோசமாகப் பாதிப்படைந்துள்ள ஊர்காவற்றுறை நிலைமை குறித்து அறிந்துகொள்வதற்காக நேற்று அங்கு புறப்பட்ட செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு இடைவழியில் திரும்ப நேர்ந்தது.

கடந்த புதன்கிழமை முதல் ஊர்காவற்றுறையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் காயம் அடைந்தவர்களை எடுத்துவர உதவுமாறு, பல அமைப்புகள் கோரிக்கை விடுத்து வந்தன.

பலரது வற்புறுத்தலை அடுத்து- சுமார்ஒருவாரத்தின் பின்னர் - நேற்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவைச் சேர்ந்த அதிகாரிகள் மட்டும் காரைநகர் கடற்படை முகாம் ஊடாகசெல்ல அங்கு சென்றனர்.

ஆனால் அங்கிருந்து ஊர்காவற்றுறை செல்வதற்கான ''பாதை'' இல்லாததால் பயணம் தடைப்பட்டது.

அதை அடுத்து அந்தக் குழு இன்று காலை அராலியூடாக வள்ளங்களில் அங்கு செல்லவுள்ளது.

யாழ். செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகளோ வேறுஎவரோ இவர்களுடன் செல்ல அனுமதியளிக்கப்படவில்லை என அறியவந்தது.

காயமடைந்தவர்களை இந்தக் குழுவினர், அராலித் துறையில் கொண்டுவந்து கையளிப்பார்கள் என அறிவிக்கப்பட்டது.

# யாழ். மாவட்ட அகதி முகாம்களில் பட்டினி நிலை உருவாகும் ஆபத்து

யாழ்ப்பாணம், ஆக. 31

யாழ். மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களில் பட்டினி நிலை உருவாகியிருக்கிறது.

முகாம்களை இதுவரைகாலமும் பராமரித்து வந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் உணவுக் கையிருப்பு முடிவடைந்ததே இந்நிலை ஏற்படக் காரணமாகும்.

யாழ். மாவட்டத்தில் உள்ள 342 அகதிமுகாம்களில் 45ஆயிரத்து 586 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 80 ஆயிரம் மக்கள் தங்கியுள்ளனர்.

அவற்றில் பெரும்பான்மையான அகதிகள் தங்கியுள்ள முகாம்களைப் பராமரிக்கும் பொறுப்பு யாழ். மாவட்டத்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

இதுவரை காலம் அந்த முகாம்களைப் பராமரித்து வந்த பிரஸ்தாப அமைப்புக்கள் தற்போது உணவுக் கையிருப்பு முடிந்ததால் பராமரிக்க முடியாத நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளன.

பட்டினி நிலை குறித்து அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் கருத்து வெளியிடுகையில்—

''எவ்வளவோ இன்னல்களுக்குமத்தியில் அகதிகளுக்கு உணவு விநியோகிக்க நடவடிக்கை எடுத்து வந்தோம்.

ஆனால் தற்சமயம் எமது இருப்பு முடிவடைந்து விட்டது.

நாம் கப்பலில் பொருள்களைத்தருவிக்க முயற்சி எடுத்தோம். ஆனால் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழுவின் ஒத்துழைப்பு கிடைக்காததால் அந்த முயற்சி கைகூடவில்லை.

இன்னும் மூன்று, நான்கு நாட்களுக்கு மட்டும் போதுமான கையிருப்புத்தான் எம்மிடம் உள்ளது. அதன்பின் என்ன நிலை ஏற்படப் போகிறதோ தெரியவில்லை'' — என்றார்கள். (உ-5-3)

## காரைநகரில் போராளி வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 31

காரைநகரில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நேரடி மோதல் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி சாந்தன் [ஜோன் தோமஸ்- நெடுந்தீவு] வீரமரணமடைந்தார்.

இவரது புகழுடம்பு நேற்று இராணுவ மரியாதைகளுடன் தாவடி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. (உ)

## குண்டு---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லையை இலங்கை அரசுக்குத் தெரியப்படுத்தும்படி ராஜ்ய சபை உபதலைவர் டாக்டர் [திருமதி] நஜிமாஹெய்துல்லா இந்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

எதிர்வரும் சார்க் அமைப்பு உச்சி மாநாட்டில் இலங்கைத் தமிழர்பற்றிய பிரச்சினையை விவாதித்து நிரந்தரத்தீர்வு ஒன்றைக்காண இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உறுப்பினர்கள் பலரும் சபையில் கருத்து வெளியிட்டனர். [அ-எ]

## ஊர்காவற்றுறைப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி ]

அவர் அரச அதிபருக்கு சமர்ப்பித்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளதாவது:-

★ சரவணை, நாரந்தனை பகுதிகளில் மட்டும் இராணுவ நடவடிக்கையினால் 75 பொதுமக்கள் பலியாகியுள்ளார்கள். கிராம சேவையாளர் துரைராஜாவும் உயிரிழந்துள்ளார்.

★ வேலணை, புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கங்களின் இரண்டு லொறிகளும், இரண்டு டிரக்டர்களும் பவுசரும் சேதமடைந்துள்ளன.

★ வேலணை உதவி அரச அதிபர் பணிமனை, வேலணை பிரதேசசபை தலைமைப்பணிமனை, வேலணை ப. நோ. கூ. சங்கம், வேலணை சரஸ்வதி மகா வித்தியாலயம் ஆகியவை உட்பட பல பொது நிறுவனங்களும் வீடுகளும் பலத்த சேதமடைந்துள்ளன.

— இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள இப்பகுதி மக்களுக்கு உதவுவதற்காக பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதி செய்யுங்கள்.

★ ஊரடங்கு உத்தரவை எட்டுமணித்தியாலங்கள் தளர்த்தி மக்கள் தமது சொத்துக்களை எடுக்கவும், சடலங்களை அடக்கம் செய்யவும் உதவவேண்டும்.

★ உடனடியாக உணவு எரிபொருள் அனுப்ப வேண்டும்.

உடனடியாக இரண்டு வார நிவாரண உணவு வழங்க வேண்டும்.

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முல்லையில் 2 ஹெலி---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தன.

சேதமுற்ற இரண்டுஹெலிக்கொப்டர்களும் மீண்டும் வானத்தில் எழும்பமுடியாத அளவுக்கு சேதமுற்றிருப்பதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன.

ஆனால் —

சேதமுற்ற இரண்டுஹெலிக்கொப்டர்களும் திருத்தப் பட்டு தமது தளங்களுக்குத் திரும்பிவிட்டதாகவும் —

ஹெலிக்கொப்டர்கள் மூலம் மீட்கப்பட்ட 42 படையினரும் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் —

பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா தகவல் வெளியிட்டார். இதே செய்தியை இலங்கை வானொலியும் ரூபவாஹினியும் வெளியிட்டன.

ஆனால் சுயாதீன செய்திச் சேவைகள் சேதமுற்றஹெலிக்கொப்டர்கள் இன்னும் முல்லைத்தீவு முகாமிற்கு உள்ளேயே சிக்கிப்போயிருப்பதாக நேற்றிரவு தெரிவித்தன.

ஹெலிச்கொப்டரைத்திருத்தும் முயற்சிகள் நேற்றிரவு வரை நடைபெற்றுக்கொண்டிருந்ததாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர் என்று அச்செய்திகள் குறிப்பிட்டன.

சேதமுற்ற ஹெலிக்கொப்டர்கள் முல்லைத்தீவு முகாமிலிருந்து கிளம்பியிருந்தாலும், ஒரு ஹெலிக்கொப்டரில் ஆகக் கூடியது 12 படையினரை மட்டுமே ஏற்ற முடியும் என்றும் -

ஆகவே இலங்கை அரசு கூறுவதுபோல 42 படையினர் மீட்கப்பட்டிருக்க முடியாது என்றும் அச்செய்திகள் சுட்டிக் காட்டின. (உ-எ-3)

## யாழ் கோட்டை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மளவில் கொன்று வருவதாகக் கூறப்படுவதை நான் மறுக்கின்றேன்.

மண்டைதீவை யாழ். நிலப் பரப்புடன் இணைக்கும் தாம் போதிமீது பாலம் கட்டுவதில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

மண்டைதீவுப் பகுதியில் இதுவரை ஆயிரம் கண்ணி வெடிகள் வரையில் படையினரால் அகற்றப்பட்டுள்ளன.

போர் நிறுத்தம் சம்பந்தமான கோரிக்கை விடுதலைப் புலிகள் இயக்கத்திடமிருந்து தான் வரவேண்டும் — என்றார். (அ-எ)

# மரண அறிவித்தல்

## திருமதி அன்னம்மா (மரியப்பிள்ளை) அந்தோனிப்பிள்ளை (சிங்கம்)

யாழ். குருநகர் 61/1, மவுண் கார்மல் வீதியைச் சேர்ந்த திருமதி அன்னம்மா (மரியப்பிள்ளை) அவர்கள் [30-8-90] வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இவர் சு. அந்தோனிப்பிள்ளை சிங்கம் (குத்தகையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் கிறேஷியன் துரை (பிரான்ஸ்), பீற்றர் குமார் (இளைப்பாறிய யாழ். மாநகரசபை உத்தியோகத்தர்), கிளாறம்மா பெரியபிள்ளை, சகாயமலர் சின்னப்பிள்ளை, டக்ளஸ் (இரணைப்பாளை, முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புத் தாயாரும், லூர்த்துநாயகி கிறேஷியன். இருதயநாயகி பீற்றர் (கமநலச்சேவைத் திணைக்களம், யாழ்ப்பாணம்) ச. அ. ஜெறோம் (நிர்வாக உத்தியோகத்தர், உணவு, வர்த்தக, கடற்றொழில் அமைச்சு, திருகோணமலை), அ. ஜோசப் (இளைப்பாறிய நில அளவையாளர்) டெய்சி ஆகியோரின் அன்பு மாமியாரும், றொனி, சுவைடா, டொறின், சிரோமி, அலிஸ்ரன், யஸ்மி, ஆன்சி, வினிற்றா, ஜெனிற்றா, ஜனக்குமார், டிலூஷா ஆகியோரின் அன்புப் பேத்தியும், சூசைதாசன் பாலன் (பிரான்ஸ்) என்பவரின் பெரிய தாயாரும், சூசைப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர், ஆனைக்கோட்டை), மரியாம்பிள்ளை, கிளமென்ரா செல்வம், மனவல்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் சில்லாலை தெற்கு அஸ்ரீபன் அவர்களின் இல்லத்திலிருந்து 31-08-90 வெள்ளிக்கிழமை [இன்று] காலை 10 மணியளவில் நல்லடக்கத்திற்காக யாழ். கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

61/1, மவுண் கார்மல் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
அ. பீற்றர் குமார் (மகன்)

(13933)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 31-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org